மதுரை மாவட்டம் மேலூர் நகராட்சியில் வார்டு சிறப்பு கூட்டம் நடைபெற இருக்கிறது

# 29/10/2025 அன்று அந்தந்த வார்டுகளில் சிறப்பு கூட்டம் நடைபெற இருக்கிறது

அந்தந்த வார்டுகளில் இருக்கும் பொதுமக்கள் தங்களின் அடிப்படை தேவையான குடிநீர் வினியோகம் , திடக்கழிவு மேலாண்மை , தெரு விளக்கு பராமரிப்பு , சாலைப் பழுதுகள் , பூங்காக்கள் பராமரிப்பு மற்றும் மழைநீர் வடிகால் பராமரிப்பு போன்றவற்றில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் மேற்படி சிறப்பு கூட்டத்தில் கலந்து கொண்டு தங்கள் வார்டில் உள்ள குறைகளை எடுத்துரைக்கலாம்

# சிறப்புக் கூட்டம் அந்தந்த வார்டுகளில் உள்ள நகர்மன்ற உறுப்பினர் தலைமையில் நடைபெறும்

கூட்டத்தில் கொடுக்கப்படும் கோரிக்கைகளை நகர்மன்ற தலைவர் நகராட்சி ஆணையாளர் நகராட்சி பொறியாளர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களால் பரிசீலிக்கபட்டு நடவடிக்கை எடுக்கப்படும்

ஆகவே சம்பந்தப்பட்ட வார்டுகளில் வசிக்கும் பொதுமக்கள், குடியிருப்போர் நலச்சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு பயன்பெறுமாறு இதன் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறது

இவண்: மேலூர்  நகர்மன்ற தலைவர்,

மேலூர் நகராட்சி ஆணையாளர்